இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

ஆண்டவராகிய என் தலைவரின் ஆவி என்மேல் உளது; ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார்; ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்கவும், உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டோருக்கு விடுதலையைப் பறைசாற்றவும், கட்டுண்டோருக்கு விடிவைத் தெரிவிக்கவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழங்கவும் என்னை அனுப்பியுள்ளார். (எசாயா 61: 1-2a )

# உலகத்தின் நலன்களுக்காக அனைவரும் இணைந்து செயல்படுவீர்!

## திருத்தந்தை அறிவுறுத்து

**வத்திக்கான்:** ஒன்றிணைந்து செயல்படுவதன் வழியாக ஒரு சிறந்த முன்மாதிரியை அமைக்க வேண்டியது அவசரமானது என்றும், தங்களின் சொந்த நலன், தனிப்பட்ட குழுவினருக்காக அல்ல, மாறாக அமைதி மற்றும் காலநிலையை மிக முக்கியமாகக் கருதும் நம் உலகத்தின் நலன்களுக்காக நாம் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

டிசம்பர் 3 ஞாயிற்றுக்கிழமை ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாயில் நடைபெற்று வரும் காலநிலை மாற்றம் தொடர்பான கூட்டத்தின் ஒருபகுதியாக “Faith Pavilion எனப்படும் நம்பிக்கையின் காட்சிக்கூடமானது திறக்கப்பட்டதையடுத்து காணொளிச் செய்தியின் வழியாக இவ்வாறு தனது வாழ்த்துக்களை எடுத்துரைத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.



COP-28 கூட்டத்தில் திருத்தந்தையின் செய்தியைக் கேட்டுக்கொஓண்டிருக்கும் தலைவர்களில் சிலர்

காலநிலை மாற்றம் தொடர்பான COP கூட்டத்திற்குள் நம்பிக்கைக்கான ஒரு பெவிலியனை உருவாக்கியதற்கு நன்றி என்று கூறியுள்ள திருத்தந்தை அவர்கள், நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து பணியாற்றுவதற்கான விருப்பத்தை இந்த பெவிலியன் நிரூபிக்கின்றது என்றும், இன்று உலகிற்கு தேவை யாருக்கும் எதிரான கூட்டணிகள் அல்ல, மாறாக அனைவருக்கும் தேவையான நன்மையளிக்கின்ற ஒரு செயலே முக்கியமாகத் தேவை என்றும் வலியுறுத்தியுள்ளார்.



*2023, COP-28 கூட்டத்திற்கான தலைவர்* Sultan al-Jaber அவர்களோடு திருத்தந்தை சந்திப்பு

மதத்தின் பிரதிநிதிகளாக, மாற்றம் சாத்தியமானது என்பதை வெளிப்படுத்தவும், மாண்புள்ள மற்றும் நிலையான வாழ்க்கை முறைகளுக்கு சான்றுபகரும் வகையில் நமது பொதுவான இல்லமாகிய இப்பூமிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்று நாடுகளின் தலைவர்களிடம் சத்தமாக எடுத்துரைப்போம் என்றும் தெரிவித்துள்ளார் திருத்தந்தை.

**எளியவர்கள் மற்றும் ஏழைகளின் செபங்கள் உன்னத இறைவனின்** அரியணையை அடையும் என்று சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இத்தகையோரின் எதிர்காலத்திற்காகவும் நம் அனைவரின் எதிர்காலத்திற்காகவும் படைப்பைப் பாதுகாப்போம் நமது பொதுவான வீட்டைப் பாதுகாப்போம் அமைதியாக வாழ்வோம், அமைதியை வளர்ப்போம் என்றும் கூறி தனது காணொளிச் செய்தியினை நிறைவு செய்துள்ளார்.

**மெரினா ராஜ் – வத்திக்கான்** – *வத்திக்கான்*

# அருள்பணி அருள் சகாயராஜ் – ‘மக்கள் குரு’ பினாங்கில் நல்லடக்கம் செய்யப்பட்டார்

**பினாங்கு:** சிங்கப்பூரில் தலைமையகத்தைக் கொண்டிருக்கும் பிரான்சிஸ்கன் சபை அருள்பணியாளர் அருள் சகாய மரியதாஸ், வயது 60, கடந்த 28 நவம்பர் 2023 அன்று காலமானார் என்ற துக்க செய்தி ஆயிரக்கணக்கான கத்தோலிக்க இறை மக்களை மீளாத் துயரில் ஆழ்த்தியது.

1963-ல், பிப்ரவரி 9 ஆம் திகதி தமிழகத்தில் பிறந்த இவருக்கு ஐந்து வயதாயிருக்கும் போது இவரது குடும்பம் பினாங்கில் குறியேறியது. நான்கு பிள்ளைகள் கொண்ட இவரது குடும்பத்தில் இளையவரான இவர் தொடக்க நிலை மற்றும் இடைநிலை கல்வியை பினாங்கில் முடித்து, மின் பொறியியல் துறையில் டிப்ளோமா கல்வியை முடித்து சிங்கப்பூரில் பணி செய்தார். பின்னர் பிரான்சிஸ்கன் குருக்கள் சபையில் இணைந்து குருத்துப் படிப்பை மேற்கொண்டார் என்பது இவரது தொடக்கநிலை வரலாறு.



மறைந்த அருள்பணி ‘மக்கள் குரு’ அருள் -சகாயராஜ்

1989-ல், குருத்துவக் கல்வியைத் தொடங்கி 1995-ல் பிரான்சிஸ்கன் அருள்பணியாளராக அருள்பொழிவுக்குத் தயாரானார். 18 ஜூலை, 1997-ல் இவரது குருத்துவ அருள்பொழிவு பினாங்கு வியாகுல அன்னை ஆலயத்தில் முன்னாள் ஆயர் அந்தோணி செல்வநாயகம் அவர் களால் அருள்பொழிவு செய்யப்பட்டார். தொடர்ந்து, பினாங்கு, ஜொகூர், சபா மற்றும் சராவாக் ஆகிய மாநிலங்களில் அயராது திருப்பணியை மேற்கொண்டார்.




இளையோர் மத்தியில்

போகும் பங்குகளில் எல்லாம் இறை மக்களைக் கட்டி எழுப்புவதில் ஆர்வம் காட்டிய இவர் ‘மக்களின் குரு’ என்ற அழைக்கப்படும் அளவிற்கு பணியில் சிறந்து விளங்கினார் என்றால் மிகையாகாது.

தொடர்ந்து, புனித பிரான்சிஸ் அசிசியாரைப் போன்று பிராணிகள் மத்தியிலும் தனது அன்பை வெளிப்படுத்துவதில் இவர் சிறந்து விளங்கியதோடு, பிற சமயத்தாருடனும் உரையாடல் வழி நல்லுறவை வளர்த்து வந்தார்.

நிறைவாக, தனது குடும்பத்தினரோடும் சிற்றப்பா, மாமா தம்பி என்ற உறவு முறையில் என்றும் நிலைத்திருந்ததாகவும் இறுதி உரையில் உறவினர்களால் பகிரப் பட்டது. ஒரு சிறந்த, இறை ஊழியரை மலேசிய திருஅவை இழந்தது என்பதே பலரின் எண்ணக் குமுறல்.

*-ஆர்.கே.*

# 'ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள்' திருவருகைக் கால கருத்தரங்கு



**செராஸ்:** கடந்த டிசம்பர் 2-ஆம் தேதி, செராஸ், புனித பிரான்சிஸ் அசிசியார் பங்கில் 'ஆண்டவருக்கு வழியை ஆயத்தப்படுத் துங்கள்' (மத்தேயு 3:3) என்ற கருப் பொருளோடு திருவருகைக்கால கருத்தரங்கு நடைபெற்றது.



அருள்பணி பீட்டர் அந்தோணி அவர்களுடன் பயிற்சியில் பங்கேற்ற இறைமக்கள்

கிறிஸ்து ஒளி ஆலய பங்குத்தந்தை அருள்பணி பீட்டர் அந்தோணி அவர்கள் இக்கருத்தரங்கை வழிநடத்தினார். இதில் 40-க்கும் மேற்பட்ட பங்கு மக்களும் இதர பங்குகளிலிருந்தும் தமிழ் பேசும் மக்கள் கலந்து கொண்டனர்.

அருள்பணி பீட்டர் அந்தோணி அவர்கள் திருவருகைக்காலத்தின் வரலாற்றையும் அதன் அர்த்தத்தையும் பங்கேற்றவர்களுக்கு சிறப்பாக விளக்கினார். அவர் ஒவ்வொரு திருவருகைக்கால ஞாயிறின் கருப்பொருளான நம்பிக்கை, அமைதி, மகிழ்ச்சி மற்றும் அன்பு ஆகியவற்றை குறித்து விளக்க மளித்தார். இக்கருப்பொருள்களோடு ஏற்றப்படும் 4 மெழுகுவர்த்திகள் அனைவரின் பாதையை ஒளிர செய்யும் என்றும் அவர் எடுத்துரைத்தார்.

திருவிவிலிய வசனங்களின் மூலம் ஒவ்வொருவரின் விசுவாச பாதையை செம்மையாக்கும் வழிமுறைகளையும் திருவருகைக்காலத்தில் கிறிஸ்துவின் இரண்டாம் வரவேற்பிற்கு எவ்வாறு அனைவரும் தங்கள் உள்ளங்களை தயாரிக்க வேண்டும் எனவும் விளக்கி கூறினார்.

இதன் மூலம் இத்திருவருகைக் காலம் அனைவரின் வாழ்வையும் மாற்றியமைத்து, வரவிருக்கும் அதிசயத்தின் மகிழ்ச்சியான கொண்டாட்டமாக அமையவிருக்கும் என்று அருள்தந்தை அவர்கள் அனைவருக்கும் நம்பிக்கை அளித்தார்.

# பெத்லகேமில் அமைதி, செபத்தை வலியுறுத்தும் திருவருகைக்காலம்

இயேசு பிறந்த பெத்லகேமில் போர் மற்றும் வன்முறையினால் பாதிக்கப் பட்டிருக்கும் மக்களை நினைவுகூரும் விதமாக இவ்வாண்டு திருவருகைக்கால செயல்பாடுகள் அமைதி மற்றும் செபத்தை உள்ளடக்கியதாக இருக்கும் என்றும், காசா, இஸ்ரேல் மட்டுமின்றி மேற்குக் கரையிலும் பதற்றமான சூழல் நிலவி வருகிறது என்றும் கூறியுள்ளார் அருள்பணியாளர் பிரான்சிஸ்கோ பேட்டன்.

டிசம்பர் 2 சனிக்கிழமை திருவருகைக் காலத்தின் முன்தயாரிப்பிற்கான நாளை முன்னிட்டு புனித பூமியில் நடைபெற உள்ள திருவருகைக்காலத் தயாரிப்புக்கள் குறித்து SIR (Servizio Informazione Religiosa) எனப்படும் செய்திகளுக்கு பதிலளித்துள்ளார் புனித பூமியின் காவலரான, பிரான்சிஸ்கன் சபை அருள்பணியாளர் பிரான்சிஸ்கோ பேட்டன்.'

இயேசு பிறந்த பெத்லகேமில் திருப் பயணிகள் ஒருவரும் இல்லை, மனிதர்கள் யாருமின்றி புனித தலங்கள் வெறிச் சோடிக் காணப்படுகின்றன என்று எடுத்துரைத்துள்ள அருள்பணியாளர் பேட்டன் அவர்கள், காசா மற்றும் மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் நடந்த போர் மற்றும் வன்முறைகளே இதற்குக் காரணம் என்றும் எடுத்துரைத்துள்ளார்.

பெத்லகேம் மூடப்பட்ட ஒரு நகரமாக, எருசலேமிலிருந்து பிரிக்கப்பட்ட நகரமாகக் காட்சியளிக்கின்றது என்றும், வரலாற்றில் இதுவரை நடந்திராத இச்செயல் பெத்லகேம் போர் மற்றும் மோதல்களின் விளைவுகளை அனுபவித்து வருகிறது என்பதை முழு உலகிற்கும் நினைவூட்டுகின்றது என்றும் தெரிவித்துள்ளார் அருள்பணியாளர் பேட்டன்.



அருள்பணியாளர் பிரான்சிஸ்கோ

பெத்லகேமுக்குள் நுழைவது என்பது இஸ்ரயேல் மக்கள் செங்கடலைக் கடந்த அனுபவத்தை நினைவூட்டுகின்றது என்றும், மக்களுக்கு விடுதலையின் ஒளியைக் கொடுக்கும் அறிகுறிகளின் வரிசையில் ஒரு சுவரைக் கடந்து செல்வது என்பது தற்போதைய போர்ச் சூழ்நிலையில் நம்பிக்கையின் வலுவான அடையாளமாக இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

> இயேசு பிறந்த பெத்லகேமில் திருப்பயணிகள் ஒருவரும் இல்லை, மனிதர்கள் யாருமின்றி புனித தலங்கள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# ஆயத்தமாயிரு.. ஆனந்தமாயிரு

**பந்திங்:** கடந்த 3 டிசம்பர் அன்று திருவருகைக் காலத்தில் அடிவைத்துள்ள திருஅவைக்கு இது ஒரு தயாரிப்பு காலம் என்பதை கருத்தில் கொண்டு, பந்திங் புனிதர்கள் பேதுரு-பவுல் பங்கில் 'ஆயத்தமாயிரு.. ஆனந்தமாயிரு' எனும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவு ஒன்று தமிழ் திருத்தூதர் பணிக்குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டது.

சகோ. ஆர்.கே. சாமி அவர்கள் இச்சொற்பொழிவை பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை வழிநடத்தினார்.

திருவருகைக் காலத்தின நோக்கத்தைத் தொட்டு விளக்கியபோது, மெசியாவின் முதல் வருகைக்கு உலகம் நான்காயிரம் ஆண்டுகள் காத்திருந்த வேளையில், இப்போது அவரது இரண்டாம் வருகையை எதிர்ப்பார்த்துக் காத்திருக்க நாம் நினைவூட்டப்படுகிறோம் என்றார்.

காத்திருத்தலில் ஆர்வமும் ஆவலும் தேவை. இதில் சலிப்புக்கு இடமில்லை. மேலும், இயேசுவின் பிறப்பு பெருவிழாவுக்கான தயாரிப்பில் எளிமை இன்றியமையாதது என்றும், இயேசுவின் உலக வருகைக்கு கடவுள் ஒரு தீவனத் தொட்டியைத் தான் தயாரித்திருந்தார் என்றும் பொருள்பட விளக்கினார். ஆகவே, கிறிஸ்மஸ் தயாரிப்பில் ஏழ்மை, எளிமை மற்றும் உண்மை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார். அடுத்து, திருவருகைக் கால திருவழிபாடு பற்றி விளக்குகையில், முதல் நாள் தொடங்கி டிசம்பர் 16 வரை ஒரு பகுதியாகவும், டிசம்பர் 17 தொடங்கி 24 வரை ஒரு பகுதியாகவும் ஒரு பகுதிகளின் நோக்கத்தை எடுத்துத்தார்.




இப்பயிற்சியில் 48 பேர் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இறுதியாக, ஏற்பாட்டுக் குழுவினர் ஆதரவு நல்கிய பங்குத் தந்தைக்கும் பயிற்சியாளருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

-திருமதி அவரம்மாள், பந்திங்.

# மீட்பருக்குச் சான்று பகர்வதில் நாம் வல்லவராவோம்!

இன்று Gaudete என்று அழைக்கப்படும் "மகிழ்ச்சி"-யின் ஞாயிறு. இன்று தொடங்கி இயேசுவின் இரண்டாம் வருகையில் கவனம் செலுத்துவதிலிருந்து அவர் மனுவுருவான முதல் வருகைக்கு நாம் நமது கவனத்தைச் செலுத்த அழைக்கப்படுகிறோம். இக்காலத் தில் நாம் மகிழ்ச் சியடையவும், சிந்திக்கவும், பகுத்தறிந்து சாட்சியமளிக்கவும் அழைக் கப்பட்டுள் ளோம்.

முதல் வாசகமானது எசாயா நூலின் மூன்றாவது பகுதியிலிருந்து வருகிறது. பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட்டு திரும் பும் யூதர்களுக்கு மெசியாவின் வருகையைப் பற்றி எசாயா இறைவாக் குரைக்கிறார். எருசலேமும், எருசலேம் ஆலயமும் அழிக்கப்படுடிருந்தன. அவர்கள் ஏமாற்றமடைந்தனர். இச்சூழலில், அவர்களுக்கு ஆறுதலும் ஊக்கமும் ஊட்டும் வகையில், கடவுளின் ஆவியால் நிரப்பப்பட்ட ஒருவர் வருவார், வாழ்வளிப்பார் எனும் நற்செய்தியை அறிவிக்கிறார்.

இரண்டாம் வாசகத்தில், புனித பவுல் தெசலோனிகாவில் விசுவாசிகளுக்கு இயேசு திரும்பி வருவார் என்று உறுதியளிக்கிறார். அவரது வருகைக்காகக் காத்திருக்கும் காலத்தில் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள், இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள், எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள் என்று பணிக்கிறார்.

இன்றைய நற்செய்தியில், ஒளியாம் இயேசுவின் வருகையைக் குறித்து சான்று பகர திருமுழுக்கு யோவான் வந்ததைப் பற்றி யோவான் நற்செய்தியாளர் எடுத்துரைக்கிறார். "ஆண்டவருக்கான வழியைச் செம்மையாக்குங்கள்" என்கிறார் திருமுழுக்கு யோவான். ஆம், எருசலேமிலிருந்து யூதர்கள் அனுப்பி வைத்த குருக்களும் லேவியர்களும் திருமுழுக்கு யோவானிடம் வருகிறார்கள். அவரகளது சந்தேகத்தைப் போக்க, நீர் யார், நீர் ஏன் திருமுழுக்குக் கொடுக்கின்றீர் என்று கேட்கின்றபொழுது, அவர் அவர்களிடம், நான் மெசியா அல்ல, இறைவாக்கினரும் அல்ல என்று சொல்லி விட்டு, "ஆண்டவருக்காக வழியைச் செம்மையாக்குங்கள் என பாலைநிலத்தில் குரல் ஒன்று கேட்கின்றது என்று இறைவாக்கினர் எசாயா உரைத்தது என்னைப் பற்றியே" என்று கூறுகின்றார்.

தொடர்ந்து, நான் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுக்கிறேன்... அவருடைய மிதியடி வாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை" என்கின்றார். இது இயேசுவே மெசியா அல்லது வாக்களிக்கப்பட்ட மீட்பர் என்பதற்கு சாட்சியமாக உள்ளது.

திருமுழுக்கு யோவான் நினைத்திருந்தால், நல்ல வாய்ப்பைப் பயன்படுத்தி, நானே மெசியா என்று சொல்லி அவரை நாடி வந்தோரை தமது சீடராக மாற்றியிருக் கலாம். மாறாகத் தன்னை தாழ்த்தி இயேசுவை உயர்த்துகிறார்.

யோவான் அறிவித்த திருமுழுக்கில் சில தனித்தன்மைகள் இருந்ததை மக்கள் உணரத்தொடங்கினர். மக்கள் தங்கள் பாவ வாழ்க்கையைத் துறக்க வேண்டும் எனவும் மனம் மாறிக் கடவுளிடம் செல்லவேண்டும் என்றும் கேட்ட யோவான் தம்மைவிடவும் பெரியவர் ஒருவர் வருகிறார் எனவும் அறிவித்தார். "நீங்கள் அறியாத ஒருவர் உங்களிடையே நிற்கிறார்" என்று யோவான் இயேசுவைப் பற்றிக் கூறுகிறார். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த அந்த பெரியவரின் உலக வருகையை நாம் நினைவுகூர்ந்து கொண்டாட அழைக்கப் படுகிறோம்.

ஆகவே, நாம் புனித பவுல் கூறுவது போன்று நல்லவராம் ஆண்டவரைப் பற்றிக்கொண்டு, திருமுழுக்கு யோவானைப் போன்று ஆண்டவருக்குச் சான்று பகர்ந்து, அதன்மூலம் ஆண்டவரின் பிறப்பு தருகின்ற மகிழ்ச்சியில் திளைத்திருக்க விழைவோம்.

-ஆர்.கே., காஜாங்

**திருவருகைக் காலம் 3 ம்-ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | எசாயா **61:1-2, 10-11** |
| தி.பா | லூக் 1:47-48, 49-50, 53-54 |
| 2-ம் வாசகம் | 1 தெச **5: 16-24** |
| நற்செய்தி | யோவான் 1: 6-8, 19-28 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 3**